அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 22/2013

எனது இல: HAF-2/15/CORDI/15/1537
அரசாங்க நிர்வாக மற்றும உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும் 07
2013.11...........

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
பிரதம செயலாளர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,

**பிரதேச செயலாளர்களை கொழும்புக்கு வரவழைப்பதை மட்டுப்படுத்தல்**

தேசிய முன்னுரிமைகளுடன் இணங்கி அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதேச மட்டத்திலான பொதுச்சேவை மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளின் அமுலாக்கத்தின் பிரதான பொறுப்பினை பிரதேச செயலாளர்கள் கொண்டிருக்கிறார்கள். இந்த செயற்பாடுகளை ஒழுங்காக மேற்பார்வை செய்வதற்கும் வினைத்திறனாக எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்குமென அவர்களது நிர்வாகப் பிரிவில் அணுகக்கூடியதாக இருப்பது பிரதேச செயலாளர்களுக்கு அவசியமானதாகும்.

02) எனினும், பல்வேறுபட்ட அமைச்சுக்களினால் பிரதேச செயலாளர்களை அடிக்கடி கொழும்புக்கு வரவழைத்தலானது அவர்களது கடமைகளுக்கு அதேபோல மாவட்ட செயலாளர்களது கடமைகளுக்கும் தடைகளை ஏற்படுத்தும். மேலும், அவர்களது அலுவலக கூட்டங்கள் மற்றும் முன்னரே திட்டமிடப்பட்டிருந்த களப் பரிசோதனைகள் என்பவற்றை இரத்துச்செய்து சிலவேளைகளில் ஒரு குறுகியகால அறிவிப்புடன் அவர்கள் இந்தக் கூட்டங்களுக்கு சமுகமளிக்க வேண்டியிருப்பதனால் பிரதேச செயலாளர்களும் பொதுமக்களும் பல்வேறுபட்ட கஸ்டங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது என இவ் அமைச்சுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது.

03) மேற்படி சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு கொழும்புக்கு பிரதேச செயலாளர்களை வரவழைத்தலை மட்டுப்படுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

04) அதற்கிணங்க, மிக அத்தியாவசியமான பிரச்சினைகள் தொடர்பாக நடாத்தப்படும் மாநாடுகள் மற்றும் கூட்டங்களுக்காக மட்டுமே பிரதேச செயலாளர்கள் கொழும்புக்கு வரவழைக்கப்படல் வேண்டும். மேலும், கொழும்புக்கு வரவழைக்கப்படுவதற்கான வேண்டுகோள்கள் என்னிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். வேண்டுகோள்களிற்கு இணங்க இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அல்லது வேறு பொருத்தமான அமைவிடத்திற்கு அவர்களை வரவழைப்பதனூடாக அல்லது ஒளித்தோற்ற மாநாடு வசதிக்கூடாக அவசியமான வசதி வழங்கப்பட முடியும்.

05) மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களின்மீது தங்களின் தனிப்பட்ட கவனத்தினைச் செலுத்தும்படியும் தங்களின் அமைச்சுக்கு கீழ்வரும் திணைக்கள/கூட்டுத்தாபன/நிறுவன தலைவர்களுக்கு இது தொடர்பில் அறிவிக்கும்படியும் தங்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

**பி.பீ. அபேகோன்**
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு